தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 4, யுவ - திருவள்ளுவர் ஆண்டு 2026
1995, ஏப்ரல் 17, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு"

மெய் அல்லாத ஒன்றை மெய்யானதுதான் என்று தவறாக எண்ணும் மயக்க அறிவினை உடையோர் சிறப்பு ஏதும் இல்லாது உயிர் வாழ்வோராய்த்தான் பிறரால் கருதப்படுவர்.

1. வினாக்கள்-விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள். வினா எண் 301, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க தள்ளிவைக்கப்படுகிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிகளாருக்கு ஒன்றும் இல்லையா....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு இல்லை. இன்றைக்கு அஜெண்டாவில் இருப்பதைத்தான் எடுத்துக் கொள்கிறோம். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க வினா எண் 301 பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

வினா எண் 302, திருமதி கே. எம். கலைச்செல்வி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

302—

காட்பாடியைத் தனித் தாலுகாவாகப் பிரித்தல்

*9422—திருமதி கே. எம். கலைச்செல்வி :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்பாடியைத் தனித் தாலுகாவாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

இல்லை.

திருமதி கே. எம். கலைச்செல்வி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்பாடித் தொகுதியைப் பொறுத்தமட்டில் சுமார் 25, 30 கிலோமீட்டர் தூரத்திலுள்ள குடியாத்தத்திற்குச் சென்றுதான், தாலூகா அலுவலகப் பணிகளை மக்கள் கவனிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இது காட்பாடி ஒன்றியத்தின் நீண்ட நாளைய கோரிக்கை. நீங்கள் அவசியம் இதைப் பரிசீலனை செய்து, காட்பாடியை ஒரு தனித் தாலூகாவாகப் பிரித்துத் தர வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொண்டு, இதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது காட்பாடியும், அதைச் சுற்றியுள்ள கிராமங்களும் குடியாத்தம் வட்டத்திலே இருக்கின்றன. ஆனால் தமிழகத்திலே இருக்கிற வட்டங்களைப் பார்க்கிறபோது குடியாத்தம் மிகப் பெரிய வட்டமாகவும் இல்லை, மிகச் சிறிய வட்டமாகவும் இல்லை; அது நடுத்தர வட்டமாகும். பெரிய வட்டங்களைப் பிரிக்க வேண்டுமென்று பல்வேறு கோரிக்கைகள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. அப்படி கோரிக்கைகளைக் கொண்டு வருகிறபோது, எந்தெந்த வட்டங்கள் மிகப் பெரியனவாக இருக்கின்றனவோ, அகலமாக இருக்கின்றனவோ, ஜனத்தொகைக்கு ஏற்ப போக்குவரத்து வசதி குறைவாக இருக்கின்றதோ அவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து, அந்த வரிசைப்படி வட்டங்கள் பிரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி கே. எம். கலைச்செல்வி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதுகுறித்து அரசுக்குக் கருத்துரு வந்துள்ளது.

அதாவது, இதை வேலூர் தாலுகாவில் இணைப்பதாக கருத்து கூறப்படுகிறது. அப்படி இருக்கும் பட்சத்தில், வேலூர் ஒரு பெரிய நகரம். அதனோடு இதை இணைத்துவிட்டால் இன்னும் பல சிரமங்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. எனவே இதைக் கனிவோடு பரிசீலித்து, வருகின்ற காலங்களில் நீங்கள் இதற்கு முன்னுரிமை அளித்து, தனி தாலுகாவாகக் காட்பாடியை அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டி, அதனை மீண்டும் பரிசீலிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கிற சிரமங்களைக் குறைப்பது தான் இந்த அரசாங்கத்தினுடைய நோக்கம். ஆகையால் ஒரு பகுதியை வேறொரு இடத்தில் சேர்ப்பதால் அதிகமான சிரமம் ஏற்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். குறிப்பாக அதை வேலூர் வட்டத்தோடு சேர்ப்பதால் சிரமம் ஏற்படும் என்று குறிப்பிடுகிறார்கள். அப்படிச் சேர்க்கிறபோது மக்களுக்குச் சிரமம் என்றால், சிரமம் இல்லாமல் எதைச் செய்ய முடியுமோ அதைச் செய்ய இந்த அரசு என்றைக்கும் காத்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஜெ. பரந்தாமன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் வட்டத்தில் பேர்ணாம்பட்டு மற்றும் மேல்பட்டி என்று 2 பிர்காக்கள் இருக்கின்றன. சுமார் 25 ஊராட்சிகள் பேர்ணாம்பட்டு தொகுதியில் இருக்கின்றன. மேலும் அது ஆந்திர எல்லையோரப் பகுதியில் இருக்கிற காரணத்தாலும், பேர்ணாம்பட்டு சென்சிடிவ் பகுதியாக இருக்கிற காரணத்தாலும், பிரச்சினைகள் ஏற்படும்போது வட்டாட்சியர் வருவதில் காலதாமதம் ஏற்படுகிறபோது, அதனால் சில பிரச்சினைகள் ஏற்படுகின்ற காரணத்தால், தனியாக குடியாத்தம் வட்டத்தைப் பிரிப்பதிலே சிரமம் இருக்குமானால், பேர்ணாம்பட்டு பகுதிக்குத் தனியாக ஒரு கூடுதல் வட்டாட்சியர் பதவி ஏற்படுத்தப்பட்டு வாரம் ஒரு முறை அவர் வந்து செல்ல ஆவன செய்யப்படுமா அல்லது ஒரு தொகுதிக்கு ஒரு வட்டாட்சியர் அலுவலகம் ஏற்படுத்த அரசு பரிசீலிக்குமா ?

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தொகுதிக்கு ஒரு வட்டாட்சியரை நியமிப்பதை விட அதையெல்லாம் பார்ப்பதற்காக, மண்டலத் துணை வட்டாட்சியர் என்ற பதவி இந்த அரசு வந்ததற்குப் பிறகு புதிதாக உருவாக்கப்பட்டிருக்கிறது.

அப்படி வருகிறபோது பேர்ணாம்பட்டு தொகுதியை அந்த மண்டலத் துணை வட்டாட்சியர் கவனித்துக் கொள்வார்கள். ஏதாவது கலவரம் ஏற்பட்டால், அங்கே போவதற்காக வட்டாட்சியர் மற்றுமுள்ள வருவாய்த்துறை அதிகாரிகளுக்கும், அதேபோல காவல் துணை அதிகாரிகளுக்கும் வேண்டிய போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 303, திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

303—

பள்ளிகளில் கட்டாய மருத்துவப் பரிசோதனை

***10360**—திரு. எம். ஆண்டி அம்பலம் :*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைத்துப் பள்ளிகளிலும் மூன்று மாதத்திற்கு ஒரு முறை கட்டாய மருத்துவப் பரிசோதனை நடத்த அரசு பரிசீலிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டத்தின் கீழ், இப்போது ஒரு சிறப்பு முகாம், பள்ளிக் குழந்தைகளுக்காக நடத்தப்பட்டு வருகிறது. பள்ளி நலத் திட்டத்தின் கீழ் வருடத்திற்கு ஒருமுறை பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனையும் செய்யப்பட்டு வருகிறது. மூன்று மாதத்திற்கு ஒருமுறை கட்டாயமாகப் பரிசோதனை செய்யவேண்டும் என்பது இயலாத காரியம்.

திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுக்கு ஒரு முறை என்பது 12 மாதங்கள் ஆகிறது. மரியாதைக்குரிய பாரதப் பிரதமர் நேரு அவர்களின் பிறந்த நாளைக் குழந்தைகள் தின விழாவாகக் கொண்டாடுகிறோம். அப்படிப்பட்ட குழந்தைகளின் நலன் கருதி மூன்று மாதத்திற்கு அல்லது நான்கு மாதத்திற்கு ஒரு முறை என்று அந்த மருத்துவப் பரிசோதனையைச் செய்ய அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பாரா என அறிய விரும்புகிறேன்.